UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) 2020
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2020

## தமிழ் 1 (TG 1)

# தமிழ் மொழி வரலாறும் இலக்கண மரபுகளும்

# HISTORY OF TAMIL LANGUAGE AND GRAMMATICAL TRADITION

(மூன்று மணித்தியாலம்)

இவ்வினாத்தாளில் எல்லாமாக **08** வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இரு** வினாக்களையேனும் தெரிந்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

## பகுதி 1

1. தமிழ்மொழி வரலாற்றை அறிவதற்கான எழுத்துச் சான்றுகளைக் குறிப்பிட்டு, அவற்றின் முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

2. தமிழ்மொழி பிறமொழிச் சொற்களைக் கடன்வாங்க நேர்ந்த வரலாற்றுச் சூழலை விளக்கி, தமிழ்மொழி வளர்ச்சியில் கடன்வாங்கலினால் ஏற்பட்ட சாதக, பாதக விளைவுகளை ஆராய்க.

3. தமிழில் வினைச் சொற்கள் காலம் காட்டுவதில் காலம்தோறும் ஏற்பட்டுவந்த மாற்றங்களை உதாரணம் தந்து விளக்குக.

4. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து தமிழில் நவீன உரைநடை தோன்றி வளர்வதற்குச் சாதகமாய் அமைந்த காரணிகளைத் தெளிவுபடுத்தி, நவீன உரைநடையின் முக்கிய பண்புகளை விளக்குக.

ம.ப.பா.

## பகுதி 11

5. இலக்கண மரபு என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்தி, தமிழ் இலக்கண மரபில் தொல்காப்பியமும் வீரசோழியமும் பெறும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

6. தமிழ் இலக்கண ஆசிரியர்கள் சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல் வடசொல் என வகைப்படுத்துவதன் அடிப்படைகளை விளக்கி, தற்காலத் தமிழைப் பொறுத்தவரை இவ்வகைப்பாடு அவசியமா என்பது பற்றிக் கருத்துரை வழங்குக.

7. தெரிநிலை வினை, குறிப்பு வினை என்பவற்றை விளக்கித் தற்காலத் தமிழ் இலக்கணத்தில் குறிப்புவினை என்ற வகைப்பாடு தேவையில்லை என்பார் கூற்றைப் பரிசீலிக்குக.

8. தமிழ் இலக்கணச் சிந்தனை வளர்ச்சியில் ஐரோப்பிய பாதிரிமார் ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - : 2020
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2020

**TAMIL - II / தமிழ் - II (TG - II)**

**குறிப்பிட்ட பாட நூல்கள்**

(மூன்று மணித்தியாலம்)

இவ்வினாத்தாளில் எல்லாமாக **08** வினாக்கள் உள்ளன

**முதலாம்** பகுதியிலுள்ள வினாவுக்கும் **இரண்டாம்** பகுதியிலுள்ள

எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

## பகுதி I

01. மேல்வரும் பாடல்களின் சிறப்பினை விளக்குக.

(அ) முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ
விரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பின்
பரல் அவல் அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்பு புறக்கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானம்
குரங்குகளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்ப் பன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் டோன்றும் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது ம.ப.பா.

நெடும் பெருங் குன்றத்த மன்ற காந்தள்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே.

(ஆ) வழிபடு வோரை வல்லறி தீயே!
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீ மெய் கண்ட தீமை காணின்,
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி!
வந்து, அடி பொருந்தி முந்தை நிற்பின்,

தண்டமும் தணிதி, பண்டையிற் பெரிதே!
அமிழ்து அட்டு ஆனாக் கமழ்குய் அடிசில்
வரு நர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர் மலைத்தல் அல்லது, மள்ளர்
மலைத்தல் போகிய, சிலைத்தார் மார்ப!

செய்து இரங்கா வினைச் சேண்விளங் கும்புகழ்
நெய்தலங் கானல் நெடியோய்!
எய்தவந் தனம்யாம், ஏத்துகம் பலவே!

## பகுதி II

02. அகநானூற்றுச் செய்யுள்களில் தோழியின் மதிநுட்பம் புலப்படுமாற்றை விபரிக்குக.

03. புறநானூற்றுப்பாடல்களில் புலவர்கள் அரசர்களைப் புகழும்போது அரசுகளின் தன்மை, அரசர்களது போர்கள், போர் அறங்கள் ஆகியன சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.

04. ஆண்டாள் என்ற பக்திமை மிக்க பெண்ணின் உள்மன விருப்புகள் அவரது பாசுரங்களில் வெளிப்படுமாற்றை விளக்குக.

ம.ப.பா

05. சேக்கிழார், கண்ணப்ப நாயனார் புராணத்தினூடு கண்ணப்பரின் பக்திநிலையைப் படிப்படியாக வளர்த்துச் செல்வதிலுள்ள சிறப்புகள் பற்றி விபரிக்குக.

06. அரசர்க்கு, கல்வி, கேள்வி ஆகியவற்றின் அவசியம் பற்றித் திருவள்ளுவர் வற்புறுத்துமாற்றை விளக்குக.

07. "பாரதியாரின் சுயசரிதை அவரின் நிறைவேறா ஆசைகளின் நிகழ்ச்சித் தொகுப்பாகும்" – அலசுக.

அல்லது

"பாரதியார், தமிழ்க்காதல் மரபின் மீது கொண்ட பற்றை குயிற்பாட்டில் காணலாம்" - அலசுக.

08. "இலங்கையர்கோனின் சிறுகதைகள் 'ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியின் போக்கை அறிந்து கொள்ளக்கூடிய ஆவணங்களாகும்' – வெள்ளிப்பாதரசம் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றை விமரிசனம் செய்க.

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - 2020
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி) - 2020

**TAMIL - III / தமிழ் - III (TG III)**

**சோழர்காலம் முதல் நவீனகாலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறும் இலக்கியக் கோட்பாடுகளும்**

இவ்வினாப் பத்திரத்தில் எல்லாமாகப் **பத்து** (10) வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இரு** வினாக்களையேனும் தெரிந்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

**(நேரம் : மூன்று மணித்தியாலம்)**

---

## பகுதி I

01. சோழர்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களின் தனித்துவச் சிறப்புகள் பற்றிக் கருத்துரை வழங்குக.

02. விஜயநகர நாயக்கர் காலத்தில் வளர்ச்சி பெற்ற பொதுமக்கள் சார்பு இலக்கியங்கள் பற்றி விளக்குக.

03. ஐரோப்பியர் காலத்தில் தமிழ் உரைநடை முக்கியத்துவம் பெறத் தொடங்கியமைக்கான காரணங்களைப் பரிசீலிக்குக.

04. ஆரம்பகாலத் தமிழ் நாவல் வளர்ச்சி பற்றிக் கருத்துரை வழங்குக.

ம.ப.பா.

05. பின்வருவோருள் யாரேனும் ஒருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) கம்பர்

(ஆ) குமரகுருபரர்

(இ) பாரதிதாசன்

(ஈ) கு. ப. ராஜகோபாலன்

## பகுதி II

06. "இலக்கிய வளர்ச்சியை ஆக்கபூர்வமாக உயர்த்துவதில் இலக்கியத் திறனாய்வு மிகுந்த பங்களிப்பினைச் செலுத்துகின்றது." இக்கூற்றினைப் பரிசீலிக்குக.

07. ஒரு சிறந்த இலக்கியத் திறனாய்வாளனுக்கு இருக்கவேண்டிய இலக்கிய ஆளுமை, ஆற்றல் பற்றிக் கருத்துரை வழங்குக.

08. இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகளில் அறவியல் கொள்கையையும், சமுதாயவியல் கொள்கையையும் ஒப்பிட்டு விளக்குக.

09. நீர் அண்மையில் வாசித்த சிறுகதை ஒன்றினைத் திறனாய்வு நோக்கில் மதிப்பிடுக.

10. பின்வரும் கவிதையைத் திறனாய்வு செய்க.

**நாளை வருவான் ஒரு மனிதன்**

நாளை வருவான் ஒரு மனிதன்
ஞாலத் திசைகள் கோலமிட
நாளை வருவான் ஒரு மனிதன்!

உள்ளத் தெளிவின் நிலவினிலே
ஒளிரும் நினைவாம் சுடரினிலே

ம.ப.பா.

வெள்ளப் புனலின் கலப்பினிலே
விடியற் பரிதி உருவினிலே...
நாளை வருவான் ஒரு மனிதன்!

காலச் சுழலின் சுழிகளிலே
கலந்து சுழலும் மேதையரின்
கோலக் கனவின் கருக்குழியில்
கோடிக் காலம் தவமிருந்தோன்
நாளை வருவான் ஒரு மனிதன்!

மாநி லத்துக் கழனியினை
மாற்றி யுழக்கி வரப்பிட்டு
ஏணி பெற்ற வாழ்க்கையினை
எருவிட்டாக்கும் நல்லுழவன்...
நாளை வருவான் ஒரு மனிதன்!

சாதி ஒன்றாய் நிறமொன்றாய்
சமயம் ஒன்றாய் மொழியொன்றாய்
நீதி ஒன்றாய் நிலையொன்றாய்
நிறைகண்டாளும் விஞ்ஞானி...
நாளை வருவான் ஒரு மனிதன்!

வானக் கூரைப் பந்தலின் கீழ்
வையகத்துப் பெருமனையில்
மானுடத்தின் பிள்ளைகளை
மருவி மகவாய் விருந்தோம்ப...
நாளை வருவான் ஒரு மனிதன்!